## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண். 118/2018

2025-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 18-ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக பி.வா.சா.1-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95-வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : கணேஷ்குமார் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் இவ்வழக்கில் 1 ஆம் பிரதிவாதி சங்கத்தின் தலைவர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 1 ஆம் பிரதிவாதி சங்கத்தின் பதிவு ஆவணம் நோட்டரி பப்ளிக் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சங்கத்தின் தலைவராக தேர்வு செய்ததற்கான தீர்மான பதிவு ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.11.1966 ஆம் தேதிய செட்டில்மெண்ட் தாசில்தார் உத்திரவு உண்மை நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.06.1967 ஆம் தேதிய பட்டாதாரர்களுக்குள் ஏற்பட்ட பதிவு பெற்ற பாககரார் பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. கடந்த 07.02.1974 ஆம் தேதிய பதிவு பெற்ற பாககரார் பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 08.03.1976 ஆம் தேதிய பதிவு பெற்ற பாககரார் பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.11.2007 ஆம் தேதிய பதிவு பெற்ற பாகபாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.02.208 ஆம் தேதிய கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 31.08.2009 ஆம் தேதிய பதிவு பெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.9.ஆக குறியீடு செய்யப்படுகிறது. வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட நில வரி இரசீது நோட்டரி பப்ளிக் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மின் கட்டண இரசீது இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய தலைவர் தடையில்லா சான்று கடிதம் நோட்டரி பப்ளிக் பி.வா.சா.ஆ.12. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 14.02.2019 ஆம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவு வெப் காப்பி பி.வா.சா.ஆ.13.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.11.2019 ஆம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவு வெப் காப்பி பி.வா.சா.ஆ.14.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.07.2025 ஆம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவு வெப் காப்பி பி.வா.சா.ஆ.15. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 1 ஆம் பிரதவாதிகள் சங்கத்தின் தலைவர் ஆவேன். 1 ஆம் பிரதிவாதி சங்கம் 28.11.2008 ல் பதிவாகியுள்ளது. காந்திகிராமத்திற்கும் தும்பிவாடி, ஆனூர் கிராமம் (தாவா சொத்திற்கும்) இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 20 கிமீ இருக்கும். பி.வா.சா.ஆ.9 ன் அடிப்படையில் தான் தாவா சொத்தை நான் உரிமை கோருகிறேன். பி.வா.சா.ஆ.9 2009 க்கு முன்பாக தும்பிவாடி கிராமத்தில் 1 ஆம் பிரதிவாதிக்கு எந்த ஒரு சொத்தும் இல்லை. வழக்கு சொத்தில் சர்வே எண்.27-ல் வாதி கோவில் உள்ளது. சர்வே நம்பர் 27 க்கு வடக்கு சர்வே எண்.28 உள்ளது. சர்வே நம்பர் 27 க்கு தெற்கேயும் கிழக்கேயும் சர்வே எண் 26 உள்ளது. சர்வே நம்பர் 26, 28 ஆகிய இரு புல எண்களும் கோவிலை சுற்றி உள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் தாசில்தார் கொடுத்த உத்தரவின் படிதான் தாவா சொத்தில் நான் உரிமை கோருகிறேன். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பெரியாண்டி பூசாரி என்பவருக்கு ஊழியமானியமாக வழங்கப்பட்டது என்று சொன்னால் தவறு. வாதி தரப்பு சான்றாவணங்களை நான்

முழுமையாக பார்க்கவில்லை. வழக்கு சொத்துக்கள் இனாமாக கொடுக்கப்பட்டது என்றால் தானமாக கொடுக்கப்பட்டது. வழக்கு சொத்துக்கள் தனி நபருக்கு தானாமாக கொடுக்கப்பட்டது. நீங்கள் தனிநபர் என்று குறிப்பிடப்படும் நபர் பெரியாண்டி பூசாரி. பெரியாண்டி என்பவர் வாதி கோவிலிற்கு ஊழியம் செய்து வந்தாரா என்று எனக்கு தெரியவில்லை. பெரியாண்டி பூசாரி மற்றும் அவர் வகையறாக்கள் உங்களுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்கள் தான் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 என்றால் சான்றிட்ட பதிவு நகல் ஒப்புக்கொள்கிறேன். தெளிவான நகலை நான் ஒப்புக்கொள்ளவில்லை. வா.சா.ஆ.5 மற்றும் 6 க்கு பிறகு கிரையம் பெற்றவர்கள் கிரைய சொத்தை அனுபவித்தார்களா என்று எனக்கு நேரில் தெரியாது. கேள்விப்பட்டேன். கிரையம் பெற்றவர்களுக்கு பட்டா பெற்றுள்ளார்களா என்றால் பெற்றுள்ளார்கள். நிலத்திற்கு உரிய கிஸ்தை கட்டியுள்ளார்கள். உங்களுக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுத்த நபர் உங்களுக்கு பட்டா மற்றும் கிஸ்து ரசீதுகளை கிரையம் செய்யும் போது ஆவணங்களாக கொடுத்தார்களா என்றால் ரசீது கொடுக்கவில்லை. பட்டா மட்டும் கொடுத்துள்ளார்கள். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நினைவில்லை. பெரியாண்டியிடம் கிரையம் பெற்ற நபர்களுக்கு பெரியாண்டி சுவாதீனம் கொடுத்தாரா என்றால் சுவாதீனம் கொடுத்துள்ளார். மாரப்ப கவுண்டர் வகையறாவுக்கு பெரியாண்டி கிரையம் செய்து

கொடுக்கும் போது பெரியாண்டி வசம் இருந்ததா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.4 முதல் 7 ஆவணங்கள் பெரியாண்டியிடம் கிரையம் பெற்றவர்கள் குடும்பத்திற்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மற்றும் விடுதலை ஆவணம் என்று சொன்னால் சரிதான். மாரப்பகவுண்டர் வாரிசுதாரர்களிடமிருந்து பி.வா.சா.ஆ.8 ஆவணம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் தான் முதலாம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியினை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த கிரைய ஆவணம் தான் பி.வா.சா.ஆ.9 என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் முந்தைய ஆட்சியாளர்களால் அதாவது ராஜாக்கள் காலத்தில் வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட இனாம் பூமி என்று சொன்னால் தெரியாது. ரவிச்சந்திரனுக்கு கிரையம் கொடுத்த நபர் உயிரோடு உள்ளார்களா என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதி சொத்தினை வாங்கும் போது காலியாகத்தான் இருந்தது. தாவா சொத்தில் பெரும்பகுதி காலியாகவும், சிலர் கட்டிடங்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். சிலர் கட்டியுள்ள கட்டிடங்கள் அவர்கள் ரவிசந்திரனிடம் கிரையம் வாங்கியவர்கள். வாதி கோவில் பொறுத்த வரையில் ஒரு திட்ட வரைவு ஏற்படுத்தியுள்ளார்களா என்றால் அவ்வாறு எனக்கு தகவல் இல்லை. இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் வாதிகள் கோவிலுக்காக அறங்காவலர்களாக தேவசேனாபதி, சாமியப்பன் மற்றும் செந்தில்நாதன்

ஆகியோரை நியமித்துள்ளார்கள் என்று சொன்னால் நியமித்துள்ளார்கள் அதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நியமித்ததை எதிர்த்து உத்தரவு வாங்கியுள்ளேன். நீங்கள் ரத்தானது என்று குறிப்பிடுவது பி.வா.சா.ஆ.14 என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.14 உதவி ஆணையாளரின் உத்தரவு செல்லாது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் இந்து அறநிலையத்துறை ஆணையாளர் தேவசேனாபதி, சாமியப்பன் மற்றும் செந்தில்நாதன் அறங்காவலர்களாக வாதி கோவிலுக்கு நியமித்து ஆணை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 உத்தரவு 22.01.2018 -ல் ஏற்பட்ட உத்தரவு என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களான அதாவது வாதி கோவில் சொத்துக்களை ரவிசந்திரன் இலாப நோக்கத்திற்காக கிரையம் வாங்கி உங்களுக்கு நன்கொடையாக கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.45/2020, 149/2021 ஆகியவைகள் இந்த வழக்கு சொத்துக்கள் குறித்து உள்ள வழக்குகள் என்று சொன்னால் சரிதான்.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.